www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## HALF YEARLY EXAMINATIONS AND LANGUAGE TESTS – APRIL – 2023

## FIRST CLASS LANGUAGE TEST IN TAMIL PART – II

## PAPER I – ESSAY

## (FOR I.A.S., I.P.S. and I.F.S. OFFICERS)

Time : 3 Hours Maximum Marks : 100

1. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு 20 வரிகளில் விடை எழுதுக. (1 × 20 = 20)

   1. விவசாயிகளும் அரசின் சலுகைகளும்.
   2. தேசிய பசுமைத் தீர்ப்பாயம்.
   3. குற்றத்தடுப்பிற்கு உதவும் தகவல் தொழில்நுட்பம்.

2. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு 20 வரிகளில் விடை எழுதுக. (1 × 20 = 20)

   1. பெண் குழந்தைப் பாதுகாப்பு
   2. காவல்துறை பொதுமக்களின் நண்பன்
   3. காடுகளின் வளர்ச்சியில் விலங்குகளின் பங்கு

3. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் ஐந்திற்கு மட்டும் வாக்கியத்தில் அமைத்து விடையளிக்க. (5 × 3 = 15)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | மறுசுழற்சி | 6. | பெருந்தொற்று | 11. | குற்றம் | 16. | தந்தம் |
| 2. | உணவு | 7. | உடற்பயிற்சி | 12. | வலைதளம் | 17. | தங்கம் |
| 3. | கல்வி | 8. | சமூக இடைவெளி | 13. | போக்குவரத்து | 18. | அமைச்சர் |
| 4. | சட்டம் | 9. | தலைக்கவசம் | 14. | வாக்குறுதி | 19. | காவலர் |
| 5. | நுட்பம் | 10. | விண்ணப்பம் | 15. | சந்தனமரம் | 20. | வாக்காளர் |

[Turn over

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

4. கீழ்க்காணும் மரபுத்தொடர்களில் எவையேனும் ஐந்திற்கு மட்டும் வாக்கியத்தில் அமைத்து விடையளிக்க. **(5 × 3 = 15)**

1. ஊருக்கு உபதேசம்
2. வலைவீசுதல்
3. ஏழைஎளிய
4. வாரிஇறைத்தல்
5. கைச்சுத்தம்
6. கண்துடைப்பு
7. குரல்கொடுத்தல்
8. கூழைக்கும்பிடு
9. பட்டும் படாமலும்
10. தலைகாட்டுதல்
11. சீரும்சிறப்பும்
12. பச்சைப்பசேல்
13. பேரோடும் புகழோடும்
14. அடிபணிதல்
15. தொன்றுதொட்டு
16. கரடுமுரடு
17. கணக்குவழக்கு
18. முயற்கொம்பு
19. தாயும்சேயும்
20. நோட்டம்பார்த்தல்

5. பின்வரும் இலக்கண வினாக்களில் ஏதேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளிக்க. **(5 × 3 = 15)**

1. குறில் எழுத்தில் தொடங்கும் சொற்கள் மூன்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

   (அ) ஆணை

   (ஆ) அரசு

   (இ) ஊக்கம்

   (ஈ) உத்தரவு

   (உ) ஏற்பாடு

   (ஊ) எட்டயபுரம்

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

2. நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள் மூன்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) கல்வி

(ஆ) காடு

(இ) காவல்நிலையம்

(ஈ) குற்றவாளி

(உ) சென்னை

(ஊ) சேப்பாக்கம்

3. சுட்டெழுத்தில் தொடங்கும் சொற்கள் மூன்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) அண்ணாமலை

(ஆ) அப்பாட்டு

(இ) அலுவலகம்

(ஈ) இச்செயல்

(உ) அப்பள்ளி

(ஊ) இசைத்தமிழ்

4. சுட்டுப் பெயர்ச்சொற்கள் அமைந்த தொடர்கள் மூன்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) இந்தத் தலைமைச் செயலகம் பாதுகாப்பு வளையத்தில் உள்ளது

(ஆ) இன்று தலைமைச் செயலகம் செயல்படும்.

(இ) அந்தக் காவல்நிலையக் கண்காணிப்பாளர் நன்கு செயல்படுகிறார்.

(ஈ) வண்டலூர் வனச்சரகத்தில் உயிரியல் பூங்கா அமைந்துள்ளது.

(உ) இந்தப் பேருந்து தாம்பரம் செல்லும்.

(ஊ) அலுவலகங்கள் நாளை செயல்படும்.



[Turn over

www.prepp.in

5. வினாச் சொற்களைக் கண்டறிந்து மூன்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) எங்கே

(ஆ) என்னுடையது

(இ) யார்

(ஈ) யாவரும்

(உ) ஏன்

(ஊ) எட்டுத்திசை

6. வினாச் சொற்கள் அமைந்த தொடர்கள் மூன்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) இம்மாவட்டத்தில் உள்ள வனப்பகுதிகள் யாவை?

(ஆ) இம்மாவட்டத்தில் தண்ணீர் தட்டுப்பாடு அதிகம்.

(இ) இந் நீர்த்தேக்கப்பகுதி என் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது.

(ஈ) இக்காவல்நிலையக் கட்டுப்பாட்டில் தாம்பரம் பகுதி அமைந்துள்ளது.

(உ) இந்த வனச்சரகத்தில் யானைகள் அதிகளவு உள்ளனவா?

(ஊ) நீங்கள் இப்பணியினை எப்போது செய்து முடிப்பீர்கள்?

7. திணை சரியாக அமையும்படி பொருத்துக.

(அ) அமைச்சர் – வந்தது

(ஆ) கரடி – வந்தனர்

(இ) மக்கள் – வந்தார்

8. பால் சரியாக அமையும்படி பொருத்துக.

(அ) செந்தில் – நடந்தாள்

(ஆ) செல்வி – நடந்தது

(இ) யானை – நடந்தான்

(ஈ) யானைகள் – நடந்தனர்

(உ) மாணவர் – நடந்தன

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

9. இடம் சரியாக அமையும்படி பொருத்துக.

(அ) நான் – வந்தாய்

(ஆ) நீ – சொன்னான்

(இ) அவன் – வந்தேன்

10. பன்மைச் சொற்களைக் கண்டறிந்து மூன்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) மகளிர்

(ஆ) விவசாயி

(இ) மாணவன்

(ஈ) வேட்பாளர்கள்

(உ) தலைமைக்காவலர்

(ஊ) வணிகர்கள்

**6. பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஐந்தனுக்கு மட்டும் அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு விடை தருக : (5 × 3 = 15)**

1. (அ) நேரமின்மை (பிரித்து எழுதுக)

(ஆ) சீரமைப்பு (பிரித்து எழுதுக)

2. (அ) துறை + தேர்வு (சேர்த்து எழுதுக)

(ஆ) நன்மை + நம்பிக்கை (சேர்த்து எழுதுக)

3. (அ) கதிரவன் (பொருள் தருக)

(ஆ) குறிக்கோள் (பொருள் தருக)

4. மனம் – மணம் (பொருள் வேறுபாடு தருக)

5. ____________ விழுந்தது. (பொருத்தமான பெயர்ச் சொல்லை எழுதுக)

6. உழைப்பவன் ____________ (உயர்வான், உயற்வான்)

7. வைரம் ____________ என மின்னியது. (பளபள / பலபல)



[Turn over



Prepp Your Personal Exam Guide

www.prepp.in

8. உழவன் ஏர் கொண்டு நிலத்தை —————— (உழுதான், தோண்டினான்)

9. (எதிர்ச்சொல் தருக)

(அ) உண்மை

(ஆ) நண்பன்

10. ஒட்டுநர், மாவட்டம், திட்டம், நீதி, ஒப்பம், அரசாணை.
(அகரமுதலி வரிசையில் எழுதுக)